FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)
(பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101929

1. District : மாவட்டம் Virudhunagar | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2025 | FIR No.: மு.த.அ. எண் 10/2025 | Date: நாள் 28.11.2025

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 | Sections பிரிவுகள்: u/s 7

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 27.11.2025 | Date to : நாள் வரை

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 19.40 hrs | Time to : நேரம் வரை 23.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.11.2025 | Time : நேரம் 04.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.11.2025 | Time : நேரம் 04.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் விருதுநகர் மாவட்டம், வீரசோழன் கிராமத்தில் இருந்து ஒட்டங்குளம் வழியாக அருப்புக்கோட்டை செல்லும் சாலையில் நரிக்குடி பேருந்து நிலையம் அருகில் மற்றும் வீரசோழன் சார்பதிவாளர் அலுவலகம் சுமார் 65 வடகிழக்கு.

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.முத்துமாரி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.முத்துராமலிங்கம்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 16.05.1975 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர்/ மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் | (g) Address : முகவரி தனி வட்டாட்சியர் (நி.எ), சிப்காட்-அகத்தாகுளம் அலகு -4 (இ)அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.அசோக்குமார், 44/2025, த/பெ.முனியசாமி, உதவியாளர், காரியப்பட்டி சார்பதிவாளர் அலுவலகம், கூடுதல் பொறுப்பு: சார்பதிவாளர், வீரசோழன் சார்பதிவாளர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) Not arise

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் (ஷே.ஜாஸ்மீன்மும்தாஜ், காவல் ஆய்வாளர்) இன்று 28.11.2025 அதிகாலை 04.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.முத்துமாரி அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவையும், அத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நாள் 27.11.2025, எதிரியின் வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,24,000/-, அந்த ரூபாய் நோட்டுகள் இருந்த ROSHAN என்கிற அடையாளமுள்ள கருப்பு மற்றும் நீல நிறத்தினாலான பெரிய லஞ்ச் பேக் மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றையும் சேர்த்து திரு.அசோக்குமார், உதவியாளர், காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலகம், கூடுதல் பொறுப்பு: சார்பதிவாளர், வீரசோழன் சார்பதிவாளர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனு பின்வருமாறு அனுப்புனர் திரு.எம்.முத்துமாரி, (50/2025), த/பெ.முத்துராமலிங்கம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். தனி வட்டாட்சியர் (சிப்காட்), அகத்தாகுளம் அலகு-4, (இ) அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும்

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/11/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

28/11/25

(S. JASMINE MUMTAJ)

Name: பெயர் Inspector/VBDC/VNR.

Rank: நிலை ..... No. எண் .....

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.10/2025 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, பொருள் : விருதுநகர் மாவட்டம் - பதிவுத்துறை - விருதுநகர் மாவட்டம், வீரசோழன் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் (கூடுதல் பொறுப்பு) ஆக பணிபுரியும் திரு.அசோக்குமார் என்பவர் பயன்படுத்திய நான்கு சக்கர வாகனம் - திடீர் இணை ஆய்வு - லஞ்ச பணம் எனக்கருதி கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டுவது - தொடர்பாக. நான் தற்போது விருதுநகர் மாவட்டம், அகத்தாகுளம்-அலகு-4, (இ) அருப்புக்கோட்டை, தனிவட்டாட்சியராக (சிப்காட்) 30.09.2024 அன்று முதல் பணிபுரிந்து வருகிறேன். மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 01.10.2025ஆம் தேதி முதல் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். நேற்று (27.11.2025) மாலை சுமார் 15.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, விருதுநகர் மாவட்டம், வீரசோழன் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் (கூடுதல் பொறுப்பு) ஆக பணிபுரியும் திரு.அசோக்குமார் என்பவர், 27.11.2025 அன்று பத்திரப்பதிவுகளுக்கு பொதுமக்களுடன் வந்த பத்திர எழுத்தர்களுக்கு பத்திரப்பதிவை முடித்து கொடுத்ததற்காக, பொதுமக்களிடமிருந்து பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சப்பணத்தை பெற்று, TN 58 V 1222 TATA Sumo என்கிற நான்கு சக்கர வாகனத்தில் அந்த பணத்துடன் வீரசோழன் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து ஒட்டங்குளம் வழியாக அருப்புக்கோட்டை செல்லும் சாலையில் வந்து இரவு சுமார் 19.00 மணிக்கு மேல் நரிக்குடி பேருந்து நிலையத்தை கடந்து, அவர் குடியிருக்கும் அருப்புக்கோட்டைக்கு செல்வதாக எனக்கும், விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கும் கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையிலும், அவர்களின் வேண்டுகோளின்பேரிலும், நான், விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு நேற்று (27.11.2025) மாலை சுமார் 16.00 மணிக்கு வந்து அவர்களிடம் மேலும் விபரத்தை கேட்டுத் தெரிந்து கொண்டு, விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ஷே.ஜாஸ்மின் மும்தாஜ் மற்றும் அவர்களது குழுவினருடன் நேற்று (27.11.2025) மாலை சுமார் 17.30 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தை விட்டு புறப்பட்டு இரவு சுமார் 19.00 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.கு.இராமச்சந்திரன் அவர்களின் மேற்பார்வையில், வீரசோழன் கிராமத்திலிருந்து ஒட்டங்குளம் - நரிக்குடி வழியாக அருப்புக்கோட்டை செல்லும் சாலையில், நரிக்குடி பேருந்து நிலையம் வழியாக வருகின்ற வாகனங்களை கண்காணித்து கொண்டிருந்தபோது, இரவு சுமார் 19.40 மணியளவில் வீரசோழன் கிராமத்திலிருந்து ஒட்டங்குளம் - நரிக்குடி வழியாக செல்லும் சாலையில் நரிக்குடி பேருந்து நிலையம் அருகில் அருப்புக்கோட்டை செல்வதற்காக வந்த TN 58 V 1222 TATA Sumo என்கிற நான்கு சக்கர வாகனத்தை நான் மேற்படி அதிகாரிகள் அடங்கிய

குழுவினருடன் மறித்து விசாரித்தபோது, வீரசோழன் சார்பதிவகத்தில் IP கேமரா ஆப்ரேட்டர் திரு.சோனைச்செல்வம் என்பவர் அந்த வாகனத்தின் ஓட்டுநர் இருக்கையிலும், ஓட்டுநர் இருக்கைக்கு அருகில் இடதுபக்கம் முன்புறம் இருந்த மற்றொரு இருக்கையில் வீரசோழன் சார்பதிவக அலுவலகத்தில் சார்பதிவாளர் (கூடுதல் பொறுப்பு) திரு.அசோக்குமார் என்பவரும் அமர்ந்திருந்தனர். அவர்களிடம் திடீர் இணை ஆய்வு செய்யவுள்ள விவரம் சொல்லி, மேற்படி வாகனத்தை மேற்குபுறம் திருப்பி, நரிக்குடி பேருந்து நிலையத்தில் ஓரமாக நிறுத்தி, முதலில் திரு.அசோக்குமார் என்பவரை சோதனை செய்ய, அவரது மேல்சட்டையின் இடதுபக்க மேல்வெளி பாக்கெட்டில் ரூ.120/- பணம் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, இது தனது சொந்த பணம் என்றும், தான் இன்று (27.11.2025) செலவுக்கு வைத்திருந்த பணம் என்றும் சொன்னார். ஆகையால் அந்த ரூ.120/- பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. உடன் ஓட்டுநர் இருக்கையிலிருந்த திரு.சோனைச்செல்வம் என்பவரை சோதனை செய்ய, அவரது மேல்சட்டையின் இடதுபக்க மேல்வெளி பாக்கெட்டில் ரூ.800/- பணம் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, இது தனது சொந்த பணம் என்றும், தான் இன்று (27.11.2025) செலவுக்கு வைத்திருந்த பணம் என்றும் சொன்னார். ஆகையால் அந்த ரூ.800/- பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவர் வந்த நான்குசக்கர வாகனத்தை சோதனை செய்ய, அந்த வாகனத்தின் பின்பக்கம் மத்திய பகுதியிலிருந்த இருக்கையின்மேல் இருந்த ROSHAN என்கிற அடையாளமுள்ள கருப்பு மற்றும் நீல நிறத்தினாலான பெரிய லஞ்ச் பேக் இருந்தது. அந்த பையை சோதனை செய்ய, அதாவது முதலில் அந்த பையின் பின்புறம் இருந்த ஒரு பகுதி ஜிப்பை திறந்து பார்க்க, அதனுள் கத்தை கத்தையாக 500 ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய 6 பெரிய கட்டுக்களும், அதேபோல் 500 ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய ஒரு சிறிய கட்டும் தனித்தனியாக மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க, மேற்படி 6 பெரிய கட்டுகளில் 500 ரூபாய் நோட்டுக்கள் தலா 100 எண்ணங்கள் வீதம் மொத்தம் ரூ.3,00,000/- பணமும், மற்றொரு சிறிய கட்டில் 500 ரூபாய் நோட்டுக்கள் 48 எண்ணங்களாக ரூ.24,000/- பணமும் என மொத்தம் ரூ.3,24,000/- பணம் இருந்தது. மேற்படி பேக்கில் மற்ற பகுதிகளில் டிபன் பாக்ஸ்கள் மற்றும் டவல் இருந்தது. மேற்படி பணம் ரூ.3,24,000/- பற்றி திரு.அசோக்குமார் அவர்களிடம் கேட்க, அவர், தெரியாமல் நடந்துவிட்டது சார், தப்புதான் சார் என்றும், பத்திர எழுத்தர்களுக்கு பத்திரப்பதிவை முடித்து கொடுத்ததற்காக, பொதுமக்களிடமிருந்து பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சமாக வாங்கிய பணம் என்று கூறினார். அப்போது யார் யாரிடமிருந்து எவ்வளவு பணம் வாங்கினீர்கள் என்று கேட்க, சரியா ஞாபகம் இல்லை சார், இன்னைக்கு பதிஞ்ச 20 ஆவணங்களையும் பார்த்தால்தான் சொல்லமுடியும் சார், அதுலயும் யார் யார் எவ்வளவு கொடுத்தாங்கன்னு என்னால் குறிப்பா சொல்ல முடியாது சார், எனக்கு பின்னாடி பிரச்சினை வந்திரும் சார் என்று திரும்ப திரும்ப அதையே கூறினார். எனவே அவர் பயணம் செய்துவந்த நான்குசக்கர வாகனத்தில் அவரது மேற்படி லஞ்ச்பேக்கினுள் இருந்து எடுக்கப்பட்ட மேற்படி மொத்தம் ரூ.3,24,000/- பணம்

முழுவதும் அன்றைய தினம் (27.11.2025) பத்திரப்பதிவுகளுக்காக வீரசோழன் சார்பதிவகத்திற்கு பொதுமக்களுடன் வந்த பத்திர எழுத்தர்களுக்கு பத்திரப்பதிவை முடித்து கொடுத்ததற்காக, பொதுமக்களிடமிருந்து பத்திர எழுத்தர்கள் மூலமாக பெற்ற லஞ்சப்பணம் என்றும், அவரால் முறையான கணக்கு காட்டப்பட முடியாத பணம் என்றும் கருதி மேற்படி ரூ.3,24,000/- பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்த ரூபாய் நோட்டுக்கள் இருந்த லஞ்ச்பேக்கில் இருந்த டிபன் பாக்ஸ் உட்பட மற்ற பொருட்களை திரு.அசோக்குமாரிடம் கொடுத்துவிட்டு, மேற்படி ROSHAN என்கிற அடையாளமுள்ள கருப்பு மற்றும் நீல நிறத்தினாலான பெரிய லஞ்ச் பேக்கை கைப்பற்றப்பட்டது. அந்த வாகனத்தில் கைப்பற்றக்கூடிய வேறு எந்தவிதமான பணமோ, ஆவணங்களோ இல்லை. மேலும் மேற்படி TN 58 V 1222 TATA Sumo என்கிற நான்கு சக்கர வாகனம் யாருடையது என்று அந்த வாகனத்தை ஓட்டி வந்த திரு.சோனைச்செல்வம் அவர்களிடம் கேட்க, அவர், இந்த கார் எங்களுடையதுதான் சார், எங்க அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லாததால் சுமார் 20 நாட்களுக்கு முன்னர்தான் என் தங்கை சங்கரேஸ்வரி பெயரில் திரு.சையது சாகுல் ஹமீது என்பவரிடமிருந்து ரூ.1,22,000/- மதிப்பிற்கு வாங்கினேன், இன்னும் என் தங்கை பெயருக்கு பெயர் மாற்றம் செய்யவில்லை சார் என்றும், சார்பதிவாளர் சாரை தினமும் மாலையில் அருப்புக்கோட்டைக்கு அழைத்து செல்வேன் சார், டீசலுக்கு மட்டும் அவர் பணம் கொடுப்பார் சார், மற்றபடி அவர் பொதுமக்களிடமிருந்தோ, பத்திர எழுத்தர்களிடமிருந்தோ லஞ்சமாக பணம் கேட்டதாகவும், வாங்கியதாகவும் எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றும் கூறினார். பின்னர் அந்த இடம் சோதனை நடவடிக்கைகள் தயார் செய்வதற்கு ஏற்ற இடமாக இல்லாததால், இரவு சுமார் 20.00 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு, அவர்கள் பணிபுரியும் விருதுநகர் மாவட்டம், வீரசோழன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இரவு சுமார் 20.20 மணிக்கு சென்று, அவ்வலுவலகத்தில் பயன்படுத்தும் அலுவலக பணியாளர்களின் தனிநபர் கையிருப்பு பணப்பதிவேடு மற்றும் இதர பதிவேடுகள் பற்றி திரு.அசோக்குமார் அவர்களிடம் கேட்க, அவர் அவரது இருக்கை மேலிருந்த 1)தனிநபர் பண இருப்புப் பதிவேடு தொகுதி எண்.274 சார்பதிவாளர் அலுவலகம், வீரசோழன் என்கிற 01.01.2025 முதல் 27.11.2025 வரை பதிவுகள் உள்ள பதிவேட்டை (200 பக்கங்கள்) எடுத்து ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டில் 27.11.2025 என்று வரிசை எண்.1ல் மு.அசோக்குமார் சா/ப ரூ.120/- எனவும், வரிசை எண்.3ல் மு.சோனைச்செல்வம் ஐபிகே ரூ.800/- எனவும் பதிவுகள் இருந்தது. அதாவது திடீர் இணை ஆய்வின்போது, மேற்படி இருவரிடமும் இருந்த அதே தொகை (சொந்தப்பணம்) இருப்பு பதிவேட்டிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதேபோல் 2)வருகை பதிவேடு தொகுதி எண்.59 சார்பதிவாளர் அலுவலகம், வீரசோழன் என்கிற 01.01.2025 முதல் 27.11.2025 வரை பதிவுகள் உள்ள பதிவேட்டை (52 பக்கங்கள்) எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவரிடம் இன்றை தினம் (27.11.2025) பதிவு செய்த ஆவணங்களின் விவரங்களை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து கேட்கப்பட்டது. அதன்படி அவர் அவருடைய கணினியிலிருந்து 3)Year 2025 Month November

Account A Veerachozhan Date 27-11-2025 என ஆவண எண்.1/1844/2025 முதல் 1/1862/2025 வரை மற்றும் ஆவண எண்.P/18/2025 என மொத்தம் 20 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட விவரங்கள் அடங்கிய ஆவணத்தை (4 பக்கங்கள்) பிரிண்ட் எடுத்து கொடுத்தார். அதேபோல் மேற்படி கணினியிலிருந்து 4)Year 2025 Month November Account D Veerachozhan Date 27-11-2025 (2 பக்கங்கள்) மற்றும் 5) Year 2025 Month November IP Camera / CD Account Veerachozhan Date 27-11-2025 (2 பக்கங்கள்) ஆகிய ஆவணங்களையும் பிரிண்ட் எடுத்து கொடுத்தார். மேற்படி 5 ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. மேலும் நிரந்தர முன்பணம் (H கணக்கு) பதிவேடு தொகுதி எண்.23 என்கிற பதிவேட்டினை காண்பித்து ரூ.250/- மட்டும் நிரந்தர முன்பணம் உள்ளதாக தெரிவித்து, அந்த ரூ.250/- பணத்தை காண்பித்தார். அது அரசுப்பணம் என்பதால், அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் வீரசோழன் சார்பதிவக அலுவலகத்தின் அனைத்து அறைகளையும் சோதனை செய்தபோது, கைப்பற்றக்கூடிய எந்த பொருளோ மற்றும் பணமோ இல்லை. திரு.அசோக்குமாரிடம் மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் யார் யாரிடமிருந்து பெறப்பட்டது என்று ஆவணங்களை பார்த்து கூறுங்கள் என்று மீண்டும் கேட்டபோது, அப்போது அவர், கைப்பற்றிய தொகை பெரிய தொகையாக இருப்பதால் பிரச்சினை பெரிசாயிடும் சார், யார் யாரிடம் நான் மேற்படி பணத்தை வாங்கி வைத்தேன் என்று குறிப்பாக எனக்கு தெரியாது சார் என்று கூறினார். மேலும் அவரிடம் பதிவுத்துறையில் பதிவுக்கு வரும் நபர்களிடமிருந்து ரொக்கமாக அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் பெறப்படுகிறதா என்றும் கேட்டதற்கு, அவர், பதிவுக்காக வரும் பொதுமக்கள் யாரிடமும் நேரடியாக பணம் ரொக்கமாக பெறுவதில்லை என்றும், பதிவுக்கட்டணம், முத்திரைக்கட்டணம், தேடுதல் கட்டணம், நகல் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் அனைத்தையும் இணையதளம் வழியாகவே சார்பதிவகங்களில் பெறப்படுகிறது என்றும் தெரிவித்தார். இந்த திடீர் இணை ஆய்வு நேற்று (27.11.2025) இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இதுதொடர்பாக திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் ஒன்று 27.11.2025 அன்று இரவு 19.40 மணி முதல் இரவு 23.00 மணிக்குள் தயார் செய்யப்பட்டது. பின்னர் திரு.அசோக்குமார் அவர்களை விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி திரு.அசோக்குமார் என்பவரால் முறையாக கணக்கு காட்ட முடியாத ரூ.3,24,000/- பணம் முழுவதும் விருதுநகர் மாவட்டம், வீரசோழன் சார்பதிவகத்தில் சார்பதிவாளர் (கூடுதல் பொறுப்பு) ஆக பணிபுரியும் திரு.அசோக்குமார் பத்திரப்பதிவுகளுக்கு பொதுமக்களுடன் வந்த பத்திர எழுத்தர்களுக்கு பத்திரப்பதிவை முடித்து கொடுத்ததற்காக, பொதுமக்களிடமிருந்து பத்திர எழுத்தர்கள் மூலமாக பெற்ற லஞ்சப்பணம் என்றும், அவரால் முறையான கணக்கு காட்டப்பட முடியாத பணம் என்றும் தெரியவந்ததால் திரு.அசோக்குமார், உதவியாளர், சார்பதிவாளர் (கூடுதல் பொறுப்பு), வீரசோழன் சார்பதிவகம், விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது வழக்குப்பதிவு

செய்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நாள் 27.11.2025, மேற்படி சார்பதிவாளர் (கூடுதல் பொறுப்பு) ஆக பணிபுரியும் திரு.அசோக்குமார் அவர்களின் வாக்குமூலம், திரு.அசோக்குமார் லஞ்சமாக வைத்திருந்த பணம் ரூ.3,24,000/-, லஞ்சப்பணம் வைத்திருந்த ROSHAN என்கிற அடையாளமுள்ள கருப்பு மற்றும் நீல நிறத்தினாலான பெரிய லஞ்ச் பேக், தனிநபர் பண இருப்புப் பதிவேடு தொகுதி எண்.274 சார்பதிவாளர் அலுவலகம், வீரசோழன் என்கிற 01.01.2025 முதல் 27.11.2025 வரை பதிவுகள் உள்ள பதிவேடு (200 பக்கங்கள்), வருகை பதிவேடு தொகுதி எண்.59 சார்பதிவாளர் அலுவலகம், வீரசோழன் என்கிற 01.01.2025 முதல் 27.11.2025 வரை பதிவுகள் உள்ள பதிவேடு (52 பக்கங்கள்), Year 2025 Month November Account A Veerachozhan Date 27-11-2025 என ஆவண எண்.1/1844/2025 முதல் 1/1862/2025 வரை மற்றும் ஆவண எண்.P/18/2025 என மொத்தம் 20 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட விவரங்கள் அடங்கிய ஆவணம் (4 பக்கங்கள்), Year 2025 Month November Account D Veerachozhan Date 27-11-2025 (2 பக்கங்கள்) மற்றும் Year 2025 Month November IP Camera / CD Account Veerachozhan Date 27-11-2025 (2 பக்கங்கள்) ஆகியவற்றையும் சமர்ப்பிக்கிறேன். (sd) எம்.முத்துமாரி (28.11.2025) (எம்.முத்துமாரி), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். தனி வட்டாட்சியர் (சிப்காட்), அகத்தாகுளம் - அலகு-4, (இ) அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். Sir, Received the complaint on 28.11.25 at 04.00 hrs and registered a case in Viruthunagar V&AC Cr.No.10/2025 u/s 7 of the P.C Act 1988 as amended in 2018 on 28.11.25 at 04.30 hrs (Sd) ஷே.ஜாஸ்மீன்மும்தாஜ் 28/11/25 (S.Jasmine Mumtaj), Inspector of Police, V&AC, VNR.

The original FIR along with original complaint, Joint Surprise Check Proceedings, Statement of Accused are submitted to the court of the Principal District and Session Judge cum Special Judge for P.C. Act cases, Virudhunagar at Srivilliputhur and copies submitted to the concerned officers.

28/11/25

(S. JASMINE MUMTAJ)
Inspr/V&AC/VNR.